ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ ஆகஸ்ட். 29, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 326 ❖ ரூ.10

ஜெயலலிதா பெயரை இருட்டடிப்பு செய்வதா? மெட்ரோ ரயில் நிர்வாகத்துக்கு இபிஎஸ்

# கண்டனம்

## கோயம்பேடு புறநகர்ப் பேருந்து நிலைய நிறுத்தம் வரும்பொழுது, "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா புறநகர் பேருந்து நிலையம்" என்று முழுமையாக அறிவிப்பு செய்ய வேண்டும்

சென்னை, ஆக. 29-

கோயம்பேடு புறநகர்ப் பேருந்து நிலைய நிறுத்தம் வரும்பொழுது, ஏற்கெனவே அறிவிப்பு செய்து வந்தபடி "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா புறநகர் பேருந்து நிலையம்" என்று முழுமையாக அறிவிப்பு செய்ய வேண்டும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தை அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த 2011-ல் ஜெயலலிதா முதல்வராக பொறுப்பேற்ற பிறகு, சென்னை மெட்ரோ ரயில் லிட்., - கட்டம் 1-ன் பணிகளை விரைவாக நடத்தி முடிக்க ஆணையிட்டார். அதன்படி, மெட்ரோ ரயில் பணிகள் குறித்த காலத்தில் நடைபெற்று வந்தது. மேலும், வட சென்னை மக்களின் கோரிக்கையினை ஏற்று, திருவொற்றியூர் /விம்கோ நகர் வரையிலான விரிவாக்கத் திட்டத்துக்கு ஜெயலலிதா 23.7.2016 அன்று அடிக்கல் நாட்டினார்.

21.9.2016 அன்று சென்னை விமான நிலையம் - லிட்டில் மவுண்ட் வரையான முதல் மெட்ரோ போக்குவரத்தினை, அப்போதைய முதல்வர் ஜெயலலிதா துவக்கி வைத்தார்.

14.5.2017 அன்று திருமங்கலம் முதல் நேரு பூங்கா வரையிலான மெட்ரோ ரயில் போக்குவரத்தை எனது முன்னிலையில், இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் ஆ.வெங்கையா நாயுடு திறந்து வைத்தார்.

25.5.2018 அன்று நேரு பூங்கா முதல் சென்னை சென்ட்ரல் வரையும், மற்றும் சைதாப்பேட்டை முதல் ஏஜி-டி.எம்.எஸ். வரையான மெட்ரோ ரயில் போக்குவரத்தை துவக்கி வைத்தேன்.

10.2.2019 அன்று ஏஜி-டி.எம்.எஸ். முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான மெட்ரோ ரயில் போக்குவரத்தை துவக்கி வைத்தேன். இத்துடன் சென்னை மெட்ரோ ரயில் கட்டம் 1-ன், ரூ.18,380 கோடி மதிப்பீட்டில் 45.1 கி.மீ. நீளத்திலான பணிகள் முடிவடைந்தன.

திருவொற்றியூர் - விம்கோ நகர் வரையிலான மெட்ரோ இரயில் கட்டம்-1-ன் நீட்டிப்பு வழித் தடத்தினை 14.02.2021 அன்று எனது முன்னிலையில் பாரதப் பிரதமர் தொடங்கி வைத்தார். இதன்படி, 3,770 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 9.051 கிலோ மீட்டர் நீட்டிப்பு பணிகள் முழுமையடைந்து. மெட்ரோ ரயில் கட்டம்-1 மக்கள் பயன்பாட்டிற்கு முழுமையாக வந்தது.

21.11.2020 அன்று மத்திய உள்துறை அமைச்சர் எனது முன்னிலையில், சென்னை மாநகரின் புறநகர் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாக, 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 118.90 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ ரயில் கட்டம் - 2 திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

இவ்வாறு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனப் பணிகள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின், ஜெயலலிதா ஆட்சியிலும், தொடர்ந்து எனது தலைமையிலான அவரின் அரசிலும் விரைவுபடுத்தப்பட்டு, குறித்த காலத்தில் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது என்றால் அது மிகையல்ல.

ஆனால், இந்நிறுவனம் கடந்த சில நாட்களாக ஜெயலலிதாவின் பெயரை இருட்டடிப்பு செய்து வருவது கடும் கண்டனத்திற்குரியது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், மெட்ரோ ரயிலில் பயணம் செய்யும் பயணிகள் இறங்குவதற்கு வசதியாக, ஒவ்வொரு நிறுத்தம் வருவதற்கு முன்பும், அந்நிறுத்தத்தின் பெயரை அறிவிப்பு செய்வது வழக்கம். சென்ற வாரம் வரை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலைய மெட்ரோ நிறுத்தம் வரும்போது தமிழக அரசு சூட்டிய "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா புறநகர் பேருந்து நிலையம்" என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் அந்த நிறுத்தத்தின் பெயரை முழுமையாக அறிவிப்பு செய்து வந்தது.

ஆனால், கடந்த சில நாட்களாக மெட்ரோ ரயில் நிர்வாகம், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலைய மெட்ரோ நிறுத்தம் வரும்போது, "புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா புறநகர் பேருந்து நிலையம்" என்று அறிவிப்பு செய்யாமல், "புறநகர் பேருந்து நிறுத்தம்" என்று மட்டுமே அறிவிப்பு செய்கிறது. தமிழக அரசு சூட்டிய பெயரை மெட்ரோ ரயில் நிர்வாகம் முழுமையாக அறிவிப்பு செய்வதில்லை. ஜெயலலிதாவின் பெயரை இருட்டடிப்பு செய்து வருவது கடும் கண்டனத்துக்குரியது.

எனவே, உடனடியாக கோயம்பேடு புறநகர்ப் பேருந்து நிலைய நிறுத்தம் வரும்பொழுது, ஏற்கெனவே அறிவிப்பு செய்து வந்தபடி "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா புறநகர் பேருந்து நிலையம்" என்று முழுமையாக அறிவிப்பு செய்ய வேண்டும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தையும், விடியா தி.மு.க. அரசையும் வலியுறுத்துகிறேன். அவ்வாறு செய்யாமல், தொடர்ந்து அவரின் பெயரை இருட்டடிப்பு செய்ய நினைத்தால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் முன்பு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றும் எச்சரிக்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# "இந்தியா என்ற பெயரைக் கேட்டாலே பாஜக அரசு அலறுகிறது" திமுக தொண்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



சென்னை , ஆக. 29-

"இந்தியா என்ற பெயரைக் கேட்டாலே ஒன்றிய பாஜக அரசு அலறக் கூடிய நிலை உருவாகியிருக்கிறது. உண்மையான இந்தியா நம் பக்கம்தான் இருக்கிறது. அந்த இந்தியாதான் இந்தியாவுக்கு விடியலைத் தரக்கூடிய வலிமை கொண்டதாக, 2024 நாடாளுமன்றத் தேர்தலில் திகழும்" என்று திமுக தொண்டர்களுக்கு அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

திமுக தலைவர் பொறுப்பேற்று 5 ஆண்டுகள் முடிந்து, 6 ஆம் ஆண்டு தொடங்குவதையொட்டி, அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில், "திமுக எனும் பேரியக்கம் உண்மையான ஜனநாயக சக்திகளுடன் இணைந்து பயணிக்கின்ற இயக்கம். மக்கள் நலனுக்கு ஆதரவானவர்கள் யார், மக்களின் எதிரிகள் யார் என்று அடையாளம் கண்டு செயல்படுகின்ற இயக்கம். அந்த வகையில்தான் 2019-ம் ஆண்டு அமைந்த கொள்கைக் கூட்டணி அடுத்தடுத்த தேர்தல்களிலும் உறுதியாகத் தொடர்வதுடன், ஒவ்வொரு தேர்தல் களத்திலும் வெற்றியும் தொடர்ந்து வருகிறது.

அதுபோல, திமுகவினரும் இந்த இயக்கத்தின் லட்சியமே பெரிது என்று ஒன்றுபட்டு உழைக்கும்போது மகத்தான வெற்றி கிடைக்கிறது. திமுக தமிழகத்தை நிரந்தரமாக ஆட்சி செய்ய வேண்டும் என்பது உங்களில் ஒருவனான என் இலக்கு. தொடர்ச்சியாக நாம் ஆட்சியில் இல்லாத சூழல்களால் தமிழகத்தின் வளர்ச்சி எந்தளவு பாழ்பட்டது என்பதைப் பத்தாண்டு கால அதிமுக ஆட்சியில் மக்கள் பார்த்தார்கள். அனுபவித்தார்கள். அந்த நிலையைக் கடந்த இரண்டாண்டுகளில் பெருமளவு மாற்றி இருக்கிறோம். வளர்ச்சிப் படிக்கட்டுகளில் தமிழகம் முன்னேறிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இந்த வளர்ச்சி நீடிக்க வேண்டும் என்றால் திமுக தொடர்ந்து ஆட்சி செய்கின்ற வாய்ப்பு அமைய வேண்டும்.

ஒன்றிய பாஜக ஆட்சியாளர்கள் தங்களுக்கு எக்காலத்திலும் வெற்றி வாய்ப்பு இல்லாத தமிழகத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவதை மக்கள் அறிவார்கள். தங்கள் கட்சியின் ஆட்சி நடைபெறும் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியைவிடப் பெருமளவு குறைவாகவே தமிழகத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். இத்தகைய நிலையிலும், தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல அயராமல் உழைக்கிறது திராவிட மாடல் அரசு. விடியல் வெளிச்சத்தை மக்கள் அனுபவிக்கிறார்கள்.

ஒன்றிய ஆட்சியிலும் மாற்றம் ஏற்பட்டால்தான், நமது மாநிலத்திற்குரிய நிதி ஒதுக்கீடு முறையாகக் கிடைக்கும். முழுமையான வெளிச்சம் பரவும். தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே மதவாத இருட்டை விரட்டும் விடியல் தேவைப்படுகின்ற காலம் இது. அதற்காகத்தான் திமுக உள்ளிட்ட 26 கட்சிகள் இணைந்த இந்தியா கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியா என்ற பெயரைக் கேட்டாலே ஒன்றிய பாஜக அரசு அலறக் கூடிய நிலை உருவாகியிருக்கிறது. உண்மையான இந்தியா நம் பக்கம்தான் இருக்கிறது. அந்த இந்தியாதான் இந்தியாவுக்கு விடியலைத் தரக்கூடிய வலிமை கொண்டதாக, 2024 நாடாளுமன்றத் தேர்தலில் திகழும்.

இந்தியாவின் வெற்றி முழுமையடைய வேண்டும் என்றால் தமிழகத்தில் நாம் முழுமையான வெற்றியைப் பெற்றாக வேண்டும். திமுக தலைவர் என்ற பொறுப்பை நான் சுமந்த இந்த ஐந்தாண்டு காலத்தில் கண்ட களங்கள் அனைத்திலும் வெற்றி.. வெற்றி.. மகத்தான வெற்றி என்ற நிலை ஏற்பட்டதற்குக் காரணம் உங்களின் உழைப்புதான். உங்களின் ஆதரவு இருக்கும்வரை எந்தக் களத்திலும் உங்களில் ஒருவனான என்னால் வென்று காட்ட முடியும். ஒற்றுமையுடன் கூடிய உழைப்பு எப்போதுமே வெற்றியாக விளையும். திமுகவினர் அந்த ஒற்றுமையைக் கட்டிக்காத்து உழைத்திட வேண்டும் என்பது தலைவர் என்ற முறையில் எனது அன்பு வேண்டுகோளாகும். உங்கள் கோரிக்கைகளைக் கவனிக்க நான் இருக்கிறேன். என் வேண்டுகோளை நிறைவேற்ற நீங்கள் இருக்கிறீர்கள். நம் உயிருக்கு உயிராகத் திமுக எனும் பேரியக்கம் இருக்கிறது.

பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டு, கருணாநிதியால் கட்டிக்காக்கப்பட்ட திமுக எனும் பேரியக்கம், நமது மாநிலத்துக்கு மட்டுமல்ல, நாடு முழுவதற்குமான விடியலைத் தர வேண்டிய பொறுப்பில் பங்கேற்றிருக்கிறது. உங்கள் ஆதரவுடன் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற, உங்களில் ஒருவனான நான் ஆயத்தமாக இருக்கிறேன். காண்கின்ற களம் அனைத்திலும் வெற்றியைக் குவிப்போம்" என்று முதல்வர் கூறியுள்ளார்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது

புதுக்கோட்டை, ஆக. 29-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, பட்டாமாறுதல்; போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 412 மனுக்களை பொதுமக்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் அளித்தனர். இம்மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர் இம்மனுக்களின் மீது தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.




மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் சார்பில், பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவர்களுக்கு எலக்ட்ராணிக் முறையில் பிரெய்லி எழுத்துக்களில் படிப்பதற்காக பிரத்தியோகமாக வடிவமைக்கப்பட்ட பிரெய்லி ரீடர் கருவியினை 4 நபர்களுக்கு தலா ரூ.35,000 வீதம் ரூ.1.40 இலட்சம் மதிப்புடைய நலத்திட்ட உதவிகளை, ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (காவேரி-வைகை-குண்டாறு) ரம்யாதேவி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) செய்யது முகம்மது, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அமீர் பாஷா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# தமிழகத்தில் தனிநபர் வருமானம் ரூ.1.66 லட்சமாக உயர்வு அமைச்சர் தங்கம் தென்னரசு


சென்னை , ஆக. 29-

"2022-23 ஆண்டில் தமிழகத்தில் தனிநபர் வருமானம் 1 லட்சத்து 66 ஆயிரத்து 727 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஒன்றிய அளவில் 2022-23ல் 98 ஆயிரத்து 374 ஆக உள்ளது என்று தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு சென்னையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "விலைவாசி உயர்வை எடுத்துக் கொண்டால், தமிழகத்தில் குறைவாக இருக்கிறது. 2021-22ல் இங்கு பணவீக்கம் 7.92 சதவீதமாகவும், 2022-23ல் 5.97 சதவீதமாகவும் காணப்பட்ட நிலையில், ஒன்றிய அரசின் கணக்கை எடுத்துக் கொண்டால், 2021-22ல் 9.31 ஆகவும், 2022-23ல் 8.82 ஆகவும் இருக்கிறது.

2021ம் ஆண்டு கணக்கை எடுத்துக் கொண்டால், ஒன்றிய அரசில் பணவீக்கம் 9.3 சதவீதம், தமிழகத்தைப் பொறுத்தவரை 7.92%. 2022ல் ஒன்றிய அரசுக்கு 8.82% ஆக உயர்ந்திருந்த போது தமிழகம் 5.97 சதவீதமாக இருக்கிறோம். பணவீக்க விகிதாச்சாரத்தை எடுத்துக் கொண்டால், தமிழகம் இந்திய ஒன்றிய அளவைவிட குறைவாக இருக்கிறோம். 2021-22ல் தமிழகத்தில் தனிநபர் வருமானம் 1 லட்சத்து 54 ஆயிரத்து 557 ரூபாயாக இருந்தது. 2022-23ல் 1 லட்சத்து 66 ஆயிரத்து 727 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஒட்டுமொத்த நாட்டில் தனிநபர் வருமானம், 92 ஆயிரத்து 583 ரூபாயாக இருக்கிறது. ஒன்றிய அளவில் 2022-23ல் 98 ஆயிரத்து 374 ஆக வந்திருக்கிறது.

2011-12 நிதியாண்டு முதல் 2017-18 நிதியாண்டு வரை, ஒட்டுமொத்த மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி என்பது சமச்சீராக இல்லாமல், ஏற்ற இறக்கங்களுடன் காணப்படுகிறது. அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. 2018க்குப் பிறகு கோவிட் பெருந்தொற்று வந்தபிறகு, பொருளாதார வளர்ச்சியில் ஒரு பெரிய சரிவு வந்தது. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த சரிவில் இருந்து மீண்டும் கிட்டத்தட்ட 8 சதவீதம் என்ற அளவில் தமிழகத்தின் பொருளாதாரம் வளர்ந்துகொண்டு வருகிறது.



பெருந்தொற்றுக் காலத்துக்குப் பிறகு ஒட்டுமொத்த வளர்ச்சி எதிர்மறையாக இருந்தபோது, தமிழக பொருளாதாரம் நேர்மறையாக ஒரு நிலையான இடத்தில்தான் இருந்தது. அதன்பிறகு தமிழகத்தின் பொருளாதார நிலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதற்கு காரணம், முதல்வர் ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி நடந்துள்ள திராவிட மாடல் அரசின் திட்டங்கள், அவர் வகுத்துள்ள பொருளாதார நோக்கங்கள், மாநில திட்டக் குழுவின் ஆலோசனைகள் மற்றும் நடவடிக்கைகள். தமிழகம் மின்னணு ஏற்றுமதியில் முன்னணியில் இருக்கிறது. ஏறத்தாழ இரண்டரை லட்சம் கோடி அளவுக்கு தொழில் முதலீடுகள் வந்திருக்கிறது என்றால், இதற்கு அடிப்படையான காரணம் முதல்வர்தான்" என்று அவர் கூறினார்.

# 'சிறப்பு நீதிமன்றத்தில் ஜாமீன் கோர முடியாது' செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் செப்.15 வரை நீட்டிப்பு

சென்னை , ஆக. 29-

அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை செப்டம்பர் 15-ம் தேதி வரை நீட்டித்து எம்பி, எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத பணபரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் கடந்த ஜூன் 14-ம் தேதி அமலாக்கத் துறை அதிகாரிகள், அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்தனர். அவரது கைது சட்டப்படியானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதைத் தொடர்ந்து அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை 5 நாட்கள் காவலில் எடுத்து விசாரித்தது. இந்த விசாரணை முடிந்து, கடந்த ஆகஸ்ட் 12-ம் தேதி அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது. இதைத் தொடர்ந்து அவரது காவலை ஆகஸ்ட் 25-ம் தேதி வரை நீட்டித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

அன்றைய தினமே, செந்தில் பாலாஜி மீது 120 பக்கங்களுக்கும் மேற்பட்ட குற்றப் பத்திரிகையும், 3 ஆயிரம் பக்கங்களை கொண்ட ஆவணங்களையும் அமலாக்கத் துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்நிலையில், அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிராக அமலாக்கத் துறை தாக்கல் செய்த வழக்கை, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள எம்பி., எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றி முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ்.அல்லி உத்தரவிட்டிருந்தார்.



அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் கடந்த ஆக.25-ம் தேதி முடிவடைந்தது. இதையடுத்து, சிறப்பு நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜி காணொலி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். தொடர்ந்து அவரது நீதிமன்ற காவலை ஆகஸ்ட் 28-ம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்ட நீதிபதி, ஆக.28-ம் தேதி, செந்தில் பாலாஜியை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்த சிறைத் துறைக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதன்படி, அமைச்சர் செந்தில் பாலாஜி சிறப்பு நீதிமன்றத்தில் திங்கள்கிழமை நேரில் ஆஜர்படுத்தப்பட்டார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை வரும் செப்டம்பர் 15-ம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்டார்.

செந்தில் பாலாஜி தரப்பு வழக்கறிஞர்கள் ஏற்கெனவே ஜாமீன் கோரியிருந்த நிலையில், வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்ற நீதிபதி, சிறப்பு நீதிமன்றத்தில் ஜாமீன் கோர முடியாது. ஜாமீன் கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தை நாட உத்தரவிட்டார். மேலும், அடுத்த விசாரணைக்கு செந்தில் பாலாஜி நேரில் ஆஜராக தேவையில்லை என்றும், காணொளி மூலம் ஆஜராகவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# குழந்தைகளுடன் சைக்கிளிங் கவனம் ஈர்க்கும் அஜித்தின் புதிய போட்டோ

சென்னை , ஆக.29:

நடிகர் அஜித்குமார் சென்னையில் குழந்தைகள் சிலருடன் சைக்கிளிங் செல்லும் புகைப்படம் மற்றும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

அஜித் நடிப்பில் லைகா தயாரிக்கும் புதிய படம் 'விடாமுயற்சி'. இப்படத்தை முதலில் விக்னேஷ் சிவன் இயக்குவார் என தெரிவிக்கப்பட்டு பின்னர் மகிழ்திருமேனி பெயர் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு ரசிகர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியது. இப்படம் விரைவில் தொடங்கப்படும் என்று லைகா நிறுவனம் அறிவித்தது. சமீபத்தில் நார்வே, டென்மார்க், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளில் தன்னுடைய பைக் பயணத்தை அஜித்குமார் நிறைவு செய்தார்.



இந்த நிலையில், சென்னையில் குழந்தைகள் சிலருடன் அஜித் சைக்கிளிங் செல்லும் புகைப்படம் மற்றும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன. வெள்ளை நிற சட்டையும், ஜீன்ஸும் அணிந்தபடி அஜித் சைக்கிளில் செல்ல அவருடன் குழந்தைகள் சிலர் சைக்கிளில் பின் தொடர்கின்றனர். இதில் அஜித்தின் மனைவி ஷாலினி, அஜித்தின் குழந்தைகளான அனோஷ்கா மற்றும் ஆத்விக் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

# மத்திய அரசின் கொள்கைகளால் கடந்த 5 ஆண்டுகளில் 13.50 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர் பிரதமர் மோடி

புதுடெல்லி , ஆக.29:

வறுமையை ஒழிக்கும் நோக்கில், ஏழைகளுக்கு ஆதரவான கொள்கைகளை இந்திய அரசு கடைபிடிப்பதால், கடந்த 5 ஆண்டுகளில் 13.50 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர் என்று ஜி20 அமைப்பின் வர்த்தக அமைப்பான பி20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஜி20 நாடுகளின் வர்த்தக அமைப்பான 'பிசினஸ் 20' (பி20) அமைப்பு கடந்த 2010-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இதில் ஜி20 நாடுகளை சேர்ந்த நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் பங்கேற்கின்றன. டெல்லியில் பி20 அமைப்பின் உச்சி மாநாடு கடந்த 3 நாட்கள் நடந்தது. இதில் 55 நாடுகளை சேர்ந்த 1,500 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். ஜி20 அமைப்பில் சமர்ப்பிப்பதற்கான 54 பரிந்துரைகள் மற்றும் 172 கொள்கை நடவடிக்கைகள் பி20 அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.



இந்நிலையில், உச்சி மாநாட்டின் நிறைவு நாளான ஞாயிற்றுக்கிழமை பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கடந்த 23-ம் தேதி வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது. இதன்மூலம் இந்தியாவின் பண்டிகை காலம் முன்கூட்டியே தொடங்கிவிட்டது. சந்திரயான் திட்டத்தில் தனியார் துறை, குறு சிறு நடுத்தர தொழில் துறையின் பங்களிப்பும் உள்ளது. இந்த வெற்றியை, இந்தியாவுடன் ஒட்டுமொத்த உலகமும் கொண்டாடுகிறது.

நமது முதலீட்டுக்கு அதிகம் தேவைப்படும் விஷயம் பரஸ்பர நம்பிக்கை. இதுதான் கரோனா பெருந்தொற்று நமக்கு கற்றுக் கொடுத்த பாடம். கரோனா பெருந்தொற்று காலத்தில், 150-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தடுப்பு மருந்துகளை இந்தியா அனுப்பியது.

கடந்த சில ஆண்டுகளாக, இந்தியா அமல்படுத்திய கொள்கைகளால், கடந்த 5 ஆண்டுகளில் 13.50 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர். ஏழைகளுக்கு ஆதரவான கொள்கைகளை இந்திய அரசு கடைபிடிக்கிறது. இதன் காரணமாக, வறுமைநிலையில் இருந்து மக்கள் விடுபட்டு, அவர்களது நிலைமை மேம்படும். அடுத்த 5-7 ஆண்டுகளில், நடுத்தர வர்க்க மக்களை நீங்கள் அதிக அளவில் பார்ப்பீர்கள். இந்த புதிய நடுத்தர வர்க்கத்தினர்தான் மிகப் பெரிய நுகர்வோராக இருப்பார்கள். இவர்கள் மூலமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். ஏழைகளின் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் நடுத்தர வர்க்கமும், குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களும் பயனடைகின்றன.

வர்த்தகம் நுகர்வோர் இடையே சமநிலை இருக்கும்போதுதான் தொழில்கள் லாபகரமாக இருக்கும். இது நாடுகளுக்கும் பொருந்தும். மற்ற நாடுகளை வெறும் சந்தையாக கருதுவது உற்பத்தி நாடுகளுக்கு விரைவில் பாதிப்பை ஏற்படுத்தும். ஒவ்வொரு ஆண்டும்சர்வதேச நுகர்வோர் நலன் தினத்தை உலக வர்த்தக சமுதாயத்தினர் கொண்டாடி, நுகர்வோர் நலனில் அக்கறை செலுத்த வேண்டும். இது தொழில் துறையினர் நுகர்வோர் இடையே நம்பிக்கையை வலுப்படுத்த உதவும்.

நெறிமுறையுடன் கூடிய செயற்கை நுண்ணறிவு ஊக்குவிக்கப்படுவதை உறுதி செய்ய உலகளாவிய தொழில் துறையினரும், அரசுகளும் இணைந்து செயல்பட வேண்டும். ஒருங்கிணைந்த உலகம் என்பது பகிரப்பட்ட நோக்கம், பகிரப்பட்ட வளம், பகிரப்பட்ட எதிர்காலம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

இவ்வாறு பிரதமர் பேசினார்.




# ஒரே சூப்பர் ஸ்டார் எம்ஜிஆர் மட்டுமே மன்சூர் அலிகான் தகவல்

சென்னை , ஆக.29:

எம்ஜிஆர் மட்டுமே ஒரே சூப்பர்ஸ்டார் என்று நடிகர் மன்சூர் அலிகான் தெரிவித்துள்ளார்.

சந்தானம் கதாநாயகனாக நடித்துள்ள புதிய படம் 'கிக்'. கன்னட இயக்குநர் பிரசாந்த் ராஜ் இதனை இயக்கியுள்ளார். தான்யா ஹோப் நாயகியாக நடிக்கிறார். ராகிணி திவேதி, கோவை சரளா, தம்பி ராமையா, செந்தில், மன்சூர் அலிகான், பிரம்மானந்தம், சாது கோகிலா, முத்துக்காளை உட்பட பலர் நடித்துள்ளனர். அர்ஜுன் ஜான்யா இசையமைத்துள்ள இந்தப்படத்துக்கு சுதாகர் ராஜ் ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்குப் பிறகு நடிகர் மன்சூர் அலிகானிடம் செய்தியாளர்கள் சூப்பர் ஸ்டார் பட்டம் தொடர்பான சர்ச்சை குறித்து கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் கூறியதாவது:



"யாரை யாருடன் ஒப்பிட்டாலும் அவரவர் அவரவர் இடத்தில் இருக்கின்றனர். அடுத்து இளமையாக இருப்பவர்கள் மேலே வரவேண்டும். என்னைப் பொறுத்தவரை ஒரே ஒரு சூப்பர்ஸ்டார்தான். அது எம்ஜிஆர் மட்டுமே" இவ்வாறு மன்சூர் அலிகான் கூறினார்.

சமீபத்தில் நடந்த 'ஜெயிலர்' ஆடியோ வெளியீட்டு விழாவில் காக்கை-பருந்து குறித்துரஜினி கூறிய குட்டிக் கதை சமூக வலைதளங்களில் விவாதத்தை கிளப்பியது. இதனையடுத்து யார் உண்மையான சூப்பர்ஸ்டார் என்று இரு தரப்பு ரசிகர்களிடையே ஆன்லைன் மோதல் ஏற்பட்டது.

# உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஈட்டி எறிதலில் தங்கம் வென்றார் நீரஜ் சோப்ரா

புடாபெஸ்ட் , ஆக.29:

நடப்பு உலக தடகள சாம்பியன்ஷிப்பில் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா தங்கம் வென்றார். இதன் மூலம் உலக தடகள சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்ட்டில் உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி கடந்த 19-ம் தேதி தொடங்கியது. கடைசி நாளன்று இந்தியா சார்பில் ஆடவர் ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் நீரஜ் சோப்ரா, டிபி மானு மற்றும் கிஷோர் ஜேனா பங்கேற்றனர்.

25 வயதான நீரஜ் சோப்ரா, கடந்த 2021-ல் டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார். 2022-ல் நடைபெற்ற டைமண்ட் லீக் தடகள சாம்பியன்ஷிப் தொடரிலும் முதலிடம் பிடித்து அசத்தினார். இதைத் தொடர்ந்து யூஜின் நகரில் நடைபெற்ற உலக தடகளப் போட்டியில் அவர் வெள்ளியை கைப்பற்றினார்.

புடாபெஸ்ட் நகரில் நடைபெற்ற உலக தடகள சாம்பியன்ஷிப்பில் (2023) பங்கேற்று, முதல் சுற்றில் 88.77 மீட்டர் தூரத்துக்கு ஈட்டியை எறிந்து 2024 ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்றார். தொடர்ந்து இறுதிப் போட்டியில் விளையாடிய அவர் தனது முதல் வாய்ப்பில் ஃபவுல் செய்தார்.



இரண்டாவது வாய்ப்பில் 88.17 மீட்டர் தூரத்துக்கு ஈட்டியை எறிந்து, பட்டியலில் முதலிடம் பிடித்தார். மூன்றாவது வாய்ப்பில் 86.32 மீட்டர் தூரமும், நான்காவது வாய்ப்பில் 84.64 மீட்டர் தூரமும், ஐந்தாவது வாய்ப்பில் 87.73 மீட்டர் தூரமும், கடைசி வாய்ப்பில் 83.98 மீட்டர் தூரமும் ஈட்டியை எறிந்தார்.

பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த அர்ஷத் நதீம் தனது மூன்றாவது வாய்ப்பில் 87.82 மீட்டர் தூரம் ஈட்டியை எறிந்தார். தொடர்ந்து நான்காவது வாய்ப்பில் 87.15 மீட்டர் தூரமும் வீசிய அவர், ஐந்தாவது வாய்ப்பில் ஃபவுல் செய்தார். கடைசி வாய்ப்பில் 81.36 மீட்டர் தூரம் ஈட்டியை எறிந்தார். இந்திய வீரர்கள் டிபி மானு (6-வது இடம்) மற்றும் கிஷோர் ஜேனா (5-வது இடம்) பிடித்து டாப் 6 வீரர்களில் இடம் பெற்றனர். அவர்கள் இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தனர். ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கமும், பாகிஸ்தானின் அர்ஷத் நதீம் வெள்ளியும், செக் குடியரசை சேர்ந்த யக்கூப் வெண்கலம் வென்றார்.

மகளிர் 3000 மீட்டர் ஸ்டீப்பிள்சேஸ் இறுதிப் போட்டியில் பங்கேற்ற பருல் சவுத்ரி 11-வது இடம் பிடித்தார். ஆடவர் 4x400 மீட்டர் தொடர் ஓட்டப்பந்தயத்தில் முகம்மது அனஸ் யாஹியா, அமோஜ் ஜேக்கப், முகம்மது அஜ்மல் மற்றும் தமிழகத்தை சேர்ந்த ராஜேஷ் ரமேஷ் ஆகிய இந்திய வீரர்கள் இறுதிப் போட்டியில் பங்கேற்று 5-ம் இடம் பிடித்தனர். 2:59.92 நிமிடங்கள் இலக்கை இந்திய வீரர்கள் கடந்தனர்.

ஹரியாணாவின் பானிபட்டில் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் நீரஜ் சோப்ரா. தனது விளையாட்டு திறனால் முன்னேற்றம் கண்டார். அந்த மாநிலத்தில் உள்ள கந்த்ரா தான் அவரது சொந்த கிராமம். ஒலிம்பிக், உலக தடகள சாம்பியன்ஷிப் என தங்கம் வென்ற அவரது சாதனையை சொந்த கிராம மக்களும், உறவினர்களும் கொண்டாடி வருகின்றனர்.

"நீரஜ், உலக தடகள சாம்பியன்ஷிப்பிலும் தங்கப் பதக்கம் வென்றுள்ளது நம் நாட்டுக்கு மிகவும் பெருமையான தருணம். அவர் இந்தியா திரும்பியதும் இதனை விமரிசையாக கொண்டாடுவோம்" என அவரது தந்தை சதீஷ் குமார் தெரிவித்துள்ளார்.

# நற்சாந்துபட்டியில் இந்திய மருத்துவ சங்கம் சார்பில் பொது மருத்துவ முகாம்

திருமயம் , ஆக.29:

புதுக்கோடடை மாவட்டம், நற்சாந்துபட்டியில் செயல்பட்டு வரும், நற்சாந்துபட்டி சமூக நல அறக்கட்டளையும், இந்திய மருத்துவ சங்கமும் இணைந்து மீனாட்சி முத்துராமன் நினைவாக பொது மருத்துவ முகாமை நடத்தினர். இந்த மருத்துவ முகாமிற்கு டத்தோ. லெ.மெய்யப்ப செட்டியார் தலைமை தாங்கினார். சாத்தப்பன் செட்டியார் முன்னிலை வகித்தார். இதில், உணவிற்கு முன், பின் ரத்த சக்கரை அளவு, யூரியா, கிரியாட்டினின், மொத்த கொழுப்பின் அளவு மற்றும் கடந்த மூன்று மாதங்களாக சர்க்கரையின் சராசரி அளவு போன்ற சோதனைகள் செய்யப்பட்டது.




மேற்கண்ட அனைத்து சோதனைகளும் புதுக்கோட்டை, ஏவிஎம் இரத்தப் பரிசோதனை நிலையத்தினரால் திறம்பட செய்யப்பட்டது. இந்த முகாமிற்கு, பொது மருத்துவம் மற்றும் இருதய சிகிச்சை நிபுணர் மருத்துவர் ராமநாதன் சிறப்பு மருத்துவராக கலந்து கொண்டு, சோதனைகளின் அடிப்படையில் மருத்துவ ஆலோசனை வழங்கினார். அவரது ஆலோசனையின் படி தேவையான நோயாளிகளுக்கு, இருதய சுருள்படமும் எடுக்கப்பட்டது. அது மட்டுமல்லாது முகாமில் கலந்து கொண்ட சில நபர்களுக்கு பல் மருத்துவர் நாச்சியப்பன், இயன்முறை சிகிச்சைமருத்துவர் அசோக்ராஜ் ஆகியோரின் ஆலோசனையும் வழங்கப்பட்டது.

முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் காலை சிற்றுண்டியும், மதிய வேளையில் தேநீரும் வழங்கப்பட்டது. முன்னதாக, இந்திய மருத்துவ சங்க தலைவர் இராமமூர்த்தி வரவேற்புரையும், இறுதியாக வைரம் மெட்ரிகுலேஷன் பள்ளி தாளாளர் தேனாள் ரகுபதி சுப்ரமணியன் நன்றியுறையும் ஆற்றினர். இந்த முகாமில் சுமார் 150க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



▶ சென்னை கொருக்குப்பேட்டை பாரதி நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் ராஜகோபுரம் கட்டும் திருப்பணி பூமி பூஜையுடன் அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கப்பட்டது. இந்த விழாவில் கலந்து கொண்ட பாரதி மக்கள் பொதுநல இயக்கம் இயக்கம் சார்பில் ஆலய நிர்வாக தலைவர் பி.மணிவண்ணனிடம் அதன் நிர்வாகிகள் சந்திரமோகன், ராமு, இக்பால் ,அருள், காஜா, பாலாஜி, தாமோதரன், சசி சண்முகம், ஆகியோர் மற்றும் ஆலய நிர்வாக தலைவர் என்னிடம் கட்டுமான பணிக்கு 50 மூட்டை சிமெண்ட் மூட்டைகள் வாங்கித் தருவதாக கூறி அதற்கான ரசீதை பெற்று கொண்டனர்.உடன் ஆலய அறங்காவலர் குழு தலைவர் கே.ராஜேந்திரன் உள்ளார்.

### காரைக்காலில் இன்று நடைபெற உள்ள

# விவசாயிகள் குறைதீர் கூட்டம் புறக்கணிப்பதாக விவசாயிகள் சங்கம் அறிவிப்பு

காரைக்கால், ஆக.29:

இதுகுறித்து காரைக்கால் மாவட்ட கடைமடை விவசாயிகள் சங்க தலைவர் டி.என்.சுரேஷ் கூறியிருப்பதாவது:-

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நெல் களஞ்சியமாக டெல்டா மாவட்டத்தின் கடைமடை பகுதியான காரைக்கால் மாவட்டம் திகழ்கிறது. கடந்த 2000 கால கட்டத்தில் மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் விவசாய சாகுபடி செய்யப்பட்டு வந்தது. பின்னர் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரலையால் காரைக்கால் கடற்கரை பகுதிகளில் பெருமளவு பாதிக்கப் பட்டனர்.கடற்கரை பகுதியை ஒட்டியுள்ள கீழவெளி வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட கிராமங்களில் விவசாய பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்ததால் மண்ணின் தன்மை முற்றிலும் மாறி தற்போது நெல் விளைவிக்கும் சூழல் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த சம்பா பருவம் மற்றும் குருவை சாகுபடியில் தமிழகத்தில் இருந்து போதுமான அளவு காவிரி நீர் மற்றும் மழை பொழிவால் மாவட்டத்தில் கணிசமாக சாகுப்படி பரப்பு அதிகரித்தது.குறிப்பாக அரசின் திட்டங்கள் மற்றும் விவசாயிகள் ஊக்கத்தொகை அறிவிப்பிற்கு பிறகு கடந்த சம்பா பருவத்தில் சுமார் 5 ஆயிரம் ஹெக்டர் அதிகமான பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டது.

புதுச்சேரி அரசின் தீவிர முயற்சியாலும்,மாவட்ட ஆட்சியரின் துரித நடவடிக்கையாலும் வட்டார வளர்ச்சி துறை மூலம் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மாவட்டத்தின் உள்கன்னிகள் ,ஆறுகள்,வாய்க்கால்கள் 100 நாள் வேலை திட்டம் மற்றும் பொதுப்பணித்துறை மூலம் அதிகமாக எண்ணிக்கையில் தூர்வாரப்பட்டு சரி செய்யப்பட்டு உள்ளது. அதே போல் பெரும்பாலான மதகுகள், சட்ரஸ்கள் பொதுப்பணித்துறை மூலம் புனரமைப்பு செய்யப்பட்டு உள்ளது வரவேற்கத்தக்கது.

2020 -2021 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் பாரத பிரதமரின் விவசாயிகளின் இன்சூரன்ஸ் செய்யப்பட்ட சுமார் 700 க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இன்னமும் இன்சூரன்ஸ் தொகை கிடைக்காமல் உள்ளது. மேலும் விவசாயிகள் அற்றோர்க்கு சில நபர்களுக்கு முறைகேடாக வங்கி கணக்கில் இன்சூரன்ஸ் தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இன்று காரைக்காலில் நடைபெறும் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கடைமடை விவசாயிகள் சங்கமும்,பசுமை புரட்சி இயக்கமும் புறக்கணித்து கூட்டத்தில் கலந்து கொள்ளாது என தெரிவித்தார்.மேலும் ஐந்து சட்டமன்ற தொகுதிகளிலும் தொகுதி வாரியாக விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.அப்போது தான் திரளான விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டு தங்களது குறைகளுக்கு தீர்வு கண்டு விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாறி,விவசாயிகள் நிறைவேற்றம் கூட்டமாக மாறும் என தெரிவித்தார்.

# பெரிய போட்டிகளிலும் ஐசிசி தொடர்களிலும் சொதப்புவது இந்திய டாப் ஆர்டர் வீரர்களே !– சாபா கரீம்

டெல்லி , ஆக.29:

இந்திய அணியின் 4-ம் நிலை வீரர் யார் என்ற விவாதங்கள் ஒருபுறம் சென்று கொண்டிருக்க, சொதப்புவது டாப் ஆர்டர் வீரர்கள்தான் அவர்களை முதலில் சரி செய்யுங்கள் என்கிறார் முன்னாள் விக்கெட் கீப்பர் சாபா கரீம்.

ஆசியக் கோப்பையிலும் சரி, உலகக் கோப்பையிலும் சரி டாப் ஆர்டர் நன்றாக ஆட வேண்டும் அப்போதுதான் இந்திய அணி உலகக்கோப்பையில் ஜொலிக்க முடியும் என்கிறார் சாபா கரீம். ஒருமுறை முகமது ஆமீர் இந்திய டாப் ஆர்டரை சடுதியில் வெளியேற்ற பாகிஸ்தான் வென்றது, அதே போல் ஷாஹின் அஃப்ரீடி ஒருமுறை டி20 உலகக்கோப்பையில் ரோஹித் சர்மா, விராட் கோலி உள்ளிட்டோரைச் சாய்க்க இந்திய அணி தோல்வி கண்டது.

பிறகு மிட்செல் ஸ்டார்க், ட்ரெண்ட் போல்ட் ஆகியோர் இந்திய டாப் ஆர்டரைப் பாடாய்ப்படுத்தியுள்ளனர், அந்தப் போட்டிகளில் எல்லாம் இந்திய அணி தோல்வியையே தழுவியுள்ளது. இதைத்தான் சாபா கரீம் மிகச் சரியாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜியோ சினிமாவுக்காக பேட்டியளித்த சாபா கரீம் கூறியதாவது:

டாப் ஆர்டர்தான் இந்திய அணியின் பெரிய பலம். ஆனால் நாம் எப்படி செயல்படப்போகிறோம் என்பதில்தான் வெற்றி



அடங்கியிருக்கின்றது. நான் இதுவரை பார்த்த வரையில் பெரிய போட்டிகள், முக்கியமான போட்டிகளில், அல்லது ஐசிசி தொடர்களில் இந்தியாவின் டாப் ஆர்டர்தான் சொதப்புகின்றனர்.

எனவே அதுதான் இந்திய அணி கற்றுக்கொள்ள வேண்டிய பாடம். எனவே வரவிருக்கும் ஆசியக்கோப்பையிலும் உலகக்கோப்பையிலும் இந்தியா பரிணமிக்க வேண்டும் என்றால் டாப் ஆர்டர் சிறப்பாக செயல்பட வேண்டும். ரெகுலராக இவர்கள் நன்றாக ஸ்கோர் செய்ய வேண்டும் குறிப்பாக பெரிய போட்டிகளில் இவர்கள்தான் ஆட வேண்டும்.

ஆகவே ரோஹித் சர்மா, விராட் கோலி உள்ளிட்ட டாப் 3 அல்லது 4 வீரர்கள் பெரிய அளவில் எழுச்சி பெற வேண்டியது அவசியம். இவர்களிடத்தில் ஏகப்பட்ட அனுபவம் உள்ளது. ஷுப்மன் கில்லை அனைத்து வடிவ வீரர் ஆக்கியுள்ளோம். அவர் இந்திய அணியில் நிரந்தர இடம்பிடிக்க இதுதான் சிறந்த வாய்ப்பு எனவே அவரும் கிடைத்த வாய்ப்புகளை திறம்பட பயன்படுத்த வேண்டும்.

கில் மிக முக்கியமான வீரர். ஏனெனில் ரோஹித் சர்மா தொடக்கத்தில் மெதுவாகவே ஆடுவார், பிறகுதான் விளாசத்தொடங்குவார். அந்தத் தருணங்களில் சுப்மன் கில்தான் ரன் ரேட்டைத் தக்கவைக்க வேண்டும். சில வேளைகளில் ரோஹித் சர்மா தொடக்கத்திலிருந்தே அட்டாக்கிங் கிரிக்கெட் ஆடுகிறார். இது ரிஸ்கான விஷயம்.

ஆனால் ஆசியக் கோப்பையிலும் உலகக்கோப்பையிலும் ரோஹித் சர்மா நின்று ஆடி கடைசி வரை நிற்க வேண்டும் என்பதுதான் முக்கியம். ஆகவே ஷுப்மன் கில் மீது அதிக சுமை உள்ளது. அவர் ஆடும் விதம் பல எதிர்பார்ப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே அவருக்கு முக்கியமான தொடர்களாகும் இது.

இவ்வாறு கூறுகிறார் சாபா கரீம். ஆசியக் கோப்பை கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிராக இலங்கையின் பல்லெகிலே மைதானத்தில் இந்திய அணி செப்;2ம் தேதி முதல் போட்டியில் ஆடுகிறது.

சாபா கரீம் சொல்வது மிக முக்கியமான ஒரு விஷயமாகும். ஸ்ரேயஸ் அய்யர், கே.எல்.ராகுல், சூரியகுமார் யாதவ் உள்ளிட்ட மிடில் ஆர்டர்களின் பலவீனங்களைப் பேசும் அதே வேளையில் டாப் ஆர்டர் சொதப்பல்களையும் பேசியாக வேண்டும். இந்த அளவில் சாபா கரீம் சுட்டிக்காட்டுவது முக்கியமான ஒன்று.

# விளைநிலங்களை கையகப்படுத்தி அறிவுசார் நகரம் அமைக்கும் திட்டத்தை கைவிடவேண்டும்

## பெரியபாளையம் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது





ஊத்துக்கோட்டை, ஆக29-
திருவள்ளூர் மாவட்டம்,ஊத்துக்கோட்டை வட்டம்,பெரியபாளையத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் மண், மனிதன், மாடு, வீடு வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. டிட்கோ நிறுவனம் சார்பில் ஊத்துக்கோட்டை வட்டத்திற்குட்பட்ட விவசாய நிலங்களை கையகப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. முப்போகம் விளையக்கூடிய ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலம் பாதிக்கப்படும்.

இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.இதனை தடுக்கும் வகையில் பெரியபாளையத்தில் வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாடு வட்டத் தலைவர் டி.விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.இதில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் பி.சண்முகம்,மாநிலச் செயலாளர் பி.துளசிநாராயணன்,மாவட்ட செயலாளர் ஜி.சம்பத் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்து ஆலோசனைகளை வழங்கினர்.

பின்னர், செய்தியாளர்களை சந்தித்த அவர் 170 ஏக்கரில் அறிவுசார் நகரம் அமைக்க அரசாணை பிறப்பித்துள்ளதாகவும், இதனால் விவசாயிகள் மத்தியில் கலக்கம் ஏற்பட்டுள்ளது எனவும்,1,200 ஏக்கர் விவசாயிகளுக்கு சொந்தமான நெல், சிறுதானியங்கள்விளையகூடிய நிலம் கையகப்படுத்தக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றனர்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பறித்து புதிய திட்டங்களை நிறைவேற்றுவது கண்டிக்கத்தக்கது என்று கூறினர்.தமிழ்நாட்டில் வளர்ச்சி திட்டங்கள் என்ற பெயரில் விவசாயிகள் சம்மதம் இல்லாமல் நிலங்களை கையகப்படுத்தும் போக்கு அதிகரித்து வருகிறது.

திமுக தேர்தல் அறிக்கையில் விவசாயிகள் சம்மதம் இல்லாமல் நிலம் கையகப்படுத்த மாட்டோம் என அறிவித்தது. தற்போது அதற்கு மாறாக நிலத்தை கையகப்படுத்தும் நிலைமை ஏற்பட்டு வருகிறது.2013-ம் ஆண்டு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை பயன்படுத்துவதை விட்டுவிட்டு, பழைய சட்டங்களின்படி நிலம் கையகப்படுத்த அரசு முன் வரவேண்டும்.விவசாயிகளுக்கு பாதிப்பும், நியாமான இழப்பீடு, மறுவாழ்வு கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினர். அறிவுசார் நகரத்தை பொறுத்தவரையில் தமிழ்நாடு அரசு தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும், விளை நிலங்களை கையகப்படுத்துவதை தவிர்த்து, விவசாயத்திற்கு லாயக்கற்ற நிலையில் உள்ள தரிசுநிலங்கள்உள்ள இடத்தில் இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என கேட்டு கொண்டனர்.

உணவு பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் நெல் விளையக்கூடிய இடத்தில் இந்த திட்டத்தை செயல்படுத்துவது அறிவுடைய செயலாக இருக்காது என்றும் கூறினர். விவசாயிகளின் நில உரிமையை பாதுகாக்கும் வகையில் முதலமைச்சர் இந்த திட்டத்தை திரும்ப பெற வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.முன்னதாக விளைநிலங்களை கையகப்படுத்தி அறிவுசார் நகரம் அமைக்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு கைவிட வேண்டும் என்பதை வலியுறுத்தி மாநாட்டில் ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



▶ காரைக்கால் மாவட்டம்நிரவி திருப்பட்டினம் தொகுதியில் நிரவி காக்க மொழி பகுதியில் தேசிய நெடுஞ்சாலைக்காக விவசாயிகளின் குத்தகை (தர்பாரண்யேஸ்வரர் தேவஸ்தானம் திருநள்ளாறு) விளை நிலங்கள் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டன, இதற்கான இழப்பீட்டுத் தொகைக்கான காசோலையை 29 நபர்களுக்கு ( 78 இலட்சத்தி 42 ஆயிரத்து 332 ரூபாய் ) வழங்கப்பட உள்ளது . இதில் முதற்கட்டமாக ( 40 லட்சத்தி 88 ஆயிரத்து 283 ரூபாய் ) 13 நபர்களுக்கு நேற்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கோவில் நிர்வாக அதிகாரி அருணகிரிநாதன் வருவாய் துறை அதிகாரி செந்தில்குமரன் உடன் இருந்தனர்.

### காரைக்கால் மக்கள் போராட்ட குழுவினர்

# முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம்



காரைக்கால், ஆக,29
காரைக்கால் மாவட்டத்தில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்ந்து நிலவி வருகிறது. இந்நிலையில் புதுச்சேரி அரசு காரைக்காலில் உள்ள தொடக்கப்பள்ளி ஆசிரியர்களில் 126 பேரை புதுச்சேரிக்கும் புதுச்சேரியில் இருந்து வெறும் 88 பேரை மட்டும் காரைக்காலுக்கும் பணியிட மாறுதல் செய்வதாக அறிவித்துள்ளது இது முற்றிலும் காரைக்காலை புறக்கணிக்கும் விதமாக இருப்பதாக கூறி காரைக்கால் மாவட்ட மக்கள் போராட்டக் குழு சார்பில் இன்று காரைக்கால் முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர் இப்ப போராட்டத்தில் 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு புதுச்சேரி அரசுக்கு எதிராகவும், புதுச்சேரி கல்வித்துறைக்கு எதிராகவும் கண்டன முழக்கங்களை எழுப்பி முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாலையைக் கடந்து முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகத்தில் நுழைய முயன்ற போராட்டக்காரர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர். பின்னர் போராட்டக்காரர்கள் முதன்மை கல்வி அலுவலரின் அலுவலக வாயிலில் அமர்ந்து கண்டனம் முழக்கங்களை எழுப்பி தங்களது கோரிக்கையை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். இப் போராட்டத்தால் முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

இப் போராட்டத்திற்கு காரைக்கால் மக்கள் போராட்ட குழு ஒருங்கிணைப்பாளர் அன்சாரி பாபு தலைமை தாங்கினார் போராட்டத்தில் காரைக்கால் போராளிகள் குழுவின் தலைவர் அப்துல் ரஹீம் செயலாளர் விடுதலை கனல் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில துணை செயலாளர் செந்தமிழ்ச்செல்வன் மக்கள் போராட்ட குழு இணை ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம் சோமு மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர். இப் போராட்டத்திற்கான ஒருங்கிணைப்பு பணியை காரைக்கால் மக்கள் போராட்ட குழு இணை ஒருங்கிணைப்பாளர் சூர்யா செய்திருந்தார்

# கல்வி ஒன்றே மனிதனை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் என துரைசந்திரசேகர் எம்.எல்.ஏ கூறினார்



ஊத்துக்கோட்டை, ஆக29-
திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 2023-24-ம் கல்வியாண்டில் படிக்கும் 172 மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, பள்ளியின் தலைமை ஆசிரியர் இ.காவேரி தலைமை தாங்கினார்.உதவி தலைமை ஆசிரியர் பாஸ்கர்பாபு முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில், சிறப்பு அழைப்பாளராக பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் கலந்துகொண்டு 172 மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது: மாணவிகள் படிக்கும் வயதில் சிறப்பாக படித்து பெற்றோருக்கு நற்பெயரை ஈட்டி தர வேண்டும்.பிளஸ் டு படிப்பு என்பது வாழ்க்கை பாதைக்கு செல்லக்கூடிய வழியை திறக்கக்கூடிய சாவியாகும். ஒரு பெண் கல்வி கற்றாள் அந்த குடும்பமே சிறப்படையும்.எனவே தான் தமிழக அரசு பெண் கல்வியை ஊக்குவிக்கிறது. நான் படிக்கும் பருவத்தில் பள்ளிக்கு விடுப்பு எடுக்காமல் சென்றதால் பள்ளியில் நடைபெற்ற விழாவில் பரிசு பெற்றேன்.இந்த நிகழ்வே பிற்காலத்தில் நான் சிறப்பாக படிக்க வழிவகை செய்தது.

மேலும்,கல்வி கற்றதனால் எனக்கு சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கு போட்டியிடும் வாய்ப்பு கிடைத்தது.இதனால் இத்தொகுதி மக்களின் ஆதரவோடு வெற்றி பெற்று இன்று உங்கள் முன் சட்டமன்ற உறுப்பினராக பேசிக் கொண்டுள்ளேன். எனவே,ஒரு மனிதனை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லக்கூடியது கல்வி மட்டுமே ஆகும். எனவே,அந்தக் கல்வியை மாணவிகளாகிய நீங்கள் சிறப்பாக பெற்று வாழ்வில் பல்வேறு பதவிகளுக்கு செல்ல வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில், அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஏகாம்பரம்,ஆரணி பேரூராட்சி மன்ற தலைவி ராஜேஸ்வரி, துணைத்தலைவர் வக்கீல் சுகுமார், தியாகராய கல்லூரியின் முன்னாள் முதல்வர் ரவிச்சந்திரபாபு, ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து, ஆரணி பேரூராட்சி மன்ற நியமனக்குழு உறுப்பினர் டி.கண்ணதாசன், ஓய்வு பெற்ற கூட்டுறவு வங்கி செயலர் கருணாகரன், ஆரணி பேரூர் திமுக அவை தலைவர் ரமேஷ்,பொருளாளர் கு.கரிகாலன் கட்சியின் முக்கிய பிரமுகர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்,பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள்,எஸ்.எம்.சி நிர்வாகிகள்,இருபால் ஆசிரியர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.முன்னதாக அனைவரையும் முதுகலை ஆசிரியர் பிரேமலதா வரவேற்றார்.முடிவில்,உதவி தலைமை ஆசிரியர் தேவராஜன் நன்றி கூறினார்.

### போந்தவாக்கம் கண்டிகை கிராமத்தில்

# அருள்மிகு ஸ்ரீதர்மராஜா சமேத திரௌபதியம்மன் திருக்கோவிலில் காப்பு கட்டி விரதமிருந்து 187 பக்தர்கள் தீ மிதித்தனர்



ஊத்துக்கோட்டை, ஆக29-
திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், போந்தவாக்கம் கண்டிகை கிராமத்தில் புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீதர்மராஜா சமேத திரௌபதியம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் அக்னி வசந்த உற்சவ தீமிதி திருவிழா கடந்த 18-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றும் நிகழ்ச்சியுடன் துவங்கியது. பின்னர்,குமார மக்கள் எனப்படும் பக்தர்களுக்கு காப்பு கட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அன்று இரவு சுவாமி திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.2-ம் நாள் பகாசூரன் சம்ஹார நிகழ்ச்சி நடைபெற்றது.3-ம் நாள் திரௌபதி அம்மனுக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றது.இதன் பின்னர், சுவாமி வான வேடிக்கையுடன் திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.4-ம் நாள் சுமங்கலி பெண்கள் முளைப்பாரி எடுக்கும் நிகழ்ச்சியும்,அன்று இரவு குமார மக்கள் வேடம் போட்டு நச்சு குழி என்ற சிறப்பு நாடகம் நடைபெற்றது.5-ம் நாள் இரவு கிராமத்தார் முருகன் இல்லத்தில் இருந்து சீர்வரிசை கொண்டு வந்து காணிமுத்து இல்லத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தேவலோக பூங்கரகத்துக்கு சமர்ப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.இதன் பின்னர், பூங்கரகம் கோவிலுக்கு சென்றடைந்தது. 6-ம் நாள் காலை அம்மனுக்கு அபிஷேகமும், இரவு அர்ஜுனன் தபசு என்ற தெருக்கூத்து நாடகம் நடைபெற்றது.

7-ம் நாள் காலை பால்குடம் ஸ்ரீ காணியம்மன் கோவிலுக்கு எடுத்துச் செல்லும் நிகழ்ச்சியும்,மாலை சுமங்கலி பூஜையும்,இரவு தர்மராஜா படையல் போடும் நிகழ்ச்சி நடைபெற்றது.இதன் பின்னர்,தாரை-தப்பட்டையுடன் தர்மராஜர் வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.8-ம் நாள் அர்ஜுனன் தேர் ரதத்தோடு ஏழு எல்லைக்கு புறப்பட்டது.போந்தவாக்கம் மற்றும் கண்டிகை வழியாக அகரம்,மல்லியங்குப்பம், ஆரணி வழியாக மங்களம், மாதவரம்,நடுக்குப்பம் வழியாக போந்தவாக்கம் கண்டிகை காணியம்மன் கோவிலை வந்தடைந்தது. மாலை மாடுபிடி சண்டையும், இரவு அர்ஜுனன் தாயார் திரௌபதி அம்மன் திருவீதி உலாவரும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.9-ம் நாள் அரவான் களப்பலியும்,இரவு பதினெட்டாம் போர் எனும் தெருக்கூத்து நாடகம் நடைபெற்றது.

இன்று காலை துரியன் படுகளம் எனும் பாஞ்சாலி சபதம் நடைபெற்றது. பின்னர், அக்கினி குண்டம் எடுத்தலும்,தர்மகத்தா இல்லத்தில் அலகு பானை நிறுத்தல் பிறகு ஆலயத்தில் அலகுபானை நடைபெற்றது. மதியம் குமார மக்கள் ஏழுறு எல்லை புறப்பாடு நடைபெற்றது,மாலை கோவில் அருகே கூந்தல் முடிப்பு நிகழ்ச்சியும்,இரவு புனித நீராடிய 187 குமார மக்கள் கோவில் எதிரே அமைக்கப்பட்டு இருந்த தீகுண்டத்தில் ஒருவர் பின், ஒருவராக இறங்கி தீமிதித்தனர்.

இதன் பின்னர், வானவேடிக்கையுடன் அம்மன் திருவீதி உலா நடைபெற்றது. நேற்று விடையார் தர்மர் பட்டாபிஷேகம் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில்,சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் தங்களது குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை போந்தவாக்கம் மற்றும் கண்டிகை கிராம மக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# கொருக்குப்பேட்டையில் அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய ராஜகோபுரம் கட்டும் திருப்பணி ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் பூமி பூஜையுடன் தொடங்கியது





சென்னை, ஆக, 29 -
சென்னை கொருக்குப்பேட்டை பாரதி நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் ராஜகோபுரம் கட்டும் திருப்பணி சுமார் ரூ.45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஞாயிற்றுக்கிழமை காலை பூமி பூஜையுடன் அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், திமுக பகுதி செயலாளர் ஜெபதாஸ் பாண்டியன்,திமுக சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் பிரிவு அமைப்பாளர் என்.மருதுகணேஷ், பத்திரிகையாளர் சு.காதர் உசேன், வட்ட செயலாளர்கள் ஆர்.ராஜன், ஏழுமலை, கவுன்சிலர் மணிமேகலை,கே. முத்துகணேஷ்,ராம்குமார், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பூமி பூஜையில் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் வழங்கிய செங்கல்கள் ,ஆலய மாதர்கலாள் அந்த செங்கல்கள் மஞ்சள் தண்ணீரில் நனைத்து குங்குமம் பொட்டு வைத்து பூஜிக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டு ராஜகோபுரம் கட்டும் திருப்பணி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆலய நிர்வாகிகளான தலைவர் பி. மணிவண்ணன், செயலாளர் ஆர் சீனிவாசன், பொருளாளர் ஜி சீனிவாசன், துணைத் தலைவர்கள் டி. பிச்சைமணி ,என், கணேசன், இணைச் செயலாளர்கள் பி சீனிவாசன் ,கே விஜயகுமார், துணைச் செயலாளர் எஸ். சிவராஜ் ,எஸ் கார்த்திக் ,எஸ் சுரேஷ், வி கார்த்திக் மற்றும் ஆலய அறங்காவலர் குழு நிர்வாகிகள் தலைவர் கே ராஜேந்திரன், செயலாளர் சி சிவக்குமார், பொருளாளர் ஜி பெரியசாமி துணைத்தலைவர்கள் சி. ரவிச்சந்திரன், கே ஜெய்குமார், சிவிநாயகமூர்த்தி ,எம் தனச்சந்திரன் இணைச்செயலாளர்கள் ஜிஎஸ் கேசெல்வம், எம்பிரபு, துணைச் செயலாளர்கள் என்.ரவிசங்கர், எஸ். மகேஸ்வரன் ஆலய பூசாரி எஸ் நாகராஜ் கட்டிட மேஸ்த்திரி அன்பு ஆகியோர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### கொள்ளிடம் அருகே 2 கடலோர கிராமங்களில்

# புதிய மின் மாற்றிகளை எம்எல்ஏ பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார்



கொள்ளிடம் ஆக 29.
மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் அருகே கடலோர மடவாமேடு மற்றும் பழையாறு மீனவ கிராமங்களில் குறைந்த மின்னழுத்தத்தால் மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி உள்ளிட்ட மின்சாதன பொருட்கள் பயன்படுத்த முடியாமலும் பழுதடைந்தும் பொதுமக்கள் அவதி அடைந்து வந்தனர்.

மின் விளக்குகள் போதிய ஒளி இல்லாமல் மங்கலாக இருந்து வந்தது. பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று மடவாமேடு மற்றும் பழையாறு ஆகிய இரண்டு இடங்களிலும் ரூ.14 லட்சம் மதிப்பிலான இரண்டு புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டது.

அனைத்து பணிகளும் நிறைவு பெற்ற நிலையில் இரண்டு மின் மாற்றிகளின் துவக்க விழா நேற்று நடைபெற்றது. சீர்காழி எம்எல்ஏ பன்னீர்செல்வம் கலந்து கொண்டு நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் கொள்ளிடம் ஒன்றிய பெருந்தலைவர் ஜெயபிரகாஷ், சீர்காழி மின்சார வாரிய செயற்பொறியாளர் உமா மகேஸ்வரி, உதவி செயற்பொறியாளர்கள் விஸ்வநாதன், விஜயபாரதி, உள்ளிட்ட அதிகாரிகள் மீனவ கிராம பஞ்சாயத்தர்கள், ஊர் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.


பழையாறு சுனாமி நகரில் வசிக்கும் குடும்பத்தினர்கள் 100 குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு அவர்களின் குடும்ப தலைவர்களின் பெயரிலேயே மின் இணைப்பை மாற்றி அதற்கான ஆணையை சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் பயனாளிகளிடம் வழங்கினார்.

தொடர்ந்து எம்எல்ஏ பன்னீர்செல்வம் கூறுகையில், பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்று புதியதாக ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு மின்மாற்றிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் இனிமேல் குறைந்த மின்னழுத்தம் இருக்காது. உரிய மின்சாரம் தொடர்ந்து கிடைக்கும். ஏதாவது குறைகள் இருந்தால் உடனடியாக தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

### காரைக்கால் மாதூர், வேளாண் அறிவியல் நிலையத்தில் "ஜல் சக்தி அபியான்" திட்டத்தின் கீழ்

# "மழைநீர் அறுவடை மற்றும் நீர் சேமிப்பு முறைகள்" குறித்த பயிற்சி நடத்தப்பட்டது



காரைக்கால்,ஆக,29
காரைக்கால் மாதூர், வேளாண் அறிவியல் நிலையத்தில் "ஜல் சக்தி அபியான்" திட்டத்தின் கீழ் "மழைநீர் அறுவடை மற்றும் நீர் சேமிப்பு முறைகள்" குறித்த பயிற்சி நேற்று நடத்தப்பட்டது.

இப்பயிற்சியை துவக்கி வைத்து பேசிய வேளாண் அறிவியல் நிலையத்தின் முதல்வர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் சீ. ஜெயசங்கர், தொழில்நுட்ப உரையாற்றிய பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப்பேராசிரியை (மண் மற்றும் நீர் பாதுகாப்பு பொறியியல்) முனைவர். மு. அங்காளீஸ்வரி, நீரின் முக்கியத்துவம் மற்றும் மழை நீர் அறுவடை என்ற தலைப்பில் உரையாற்றினார். முனைவர். வி. அரவிந்த் தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்) அவர்கள் சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் மற்றும் அதனை பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிக்கு இடையே விளக்கமாக கூறினார்.

இப்பயிற்சி தொடங்குவதற்கு முன்பு விவசாயிகள் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியை பார்வையிட்டனர். மேலும் 42 பட்டியல் இன விவசாயிகளுக்கு 30 கிலோ நெல் விதை, ஒரு கிலோ பெவேரியா பேசியானா மற்றும் ஒரு கிலோ பேசிலஸ் சப்டிலிஸ் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் சுமார் 50 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர்.



▶ காரைக்கால் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய 7 டி.எம்.சி காவிரி நீரை உடனடியாக கர்நாடக அரசு வழங்க வலியுறுத்தி புதுச்சேரி மற்றும் மத்திய அரசை கண்டித்து அகில இந்திய விவசாய சங்கம் சார்பில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு 100க்கு மேற்பட்ட விவசாயிகள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்பொழுது போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தி பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். அப்பொழுது காவிரி நீரை காரைக்கால் மாவட்ட விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க வலியுறுத்தி கர்நாடகம் மற்றும் புதுச்சேரி அரசுகளுக்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளிடம் போலீசார் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது அடுத்து அவர்கள் அங்கிருந்து கலந்து சென்றனர்.

# புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இ-சேவை மையம் திறப்பு



புதுக்கோட்டை , ஆக.29-

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இ-சேவை மையத்தினை திறந்து வைத்து 80 பயனாளிகளுக்கு ரூ.81.83 இலட்சம் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மெர்சி ரம்யா, வழங்கினார். புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா முன்னிலையில் நேற்று வழங்கினார்.

பின்னர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, அரசு இ-சேவை மையங்கள்மூலம்மக்களுக்கான அரசின் சேவைகளை, அவர்களின் இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே வழங்கி வருகின்றது. மேலும், மின்னணு சேவைகளை குடிமக்களுக்கான பொது இணையதளம் வாயிலாகவும் வழங்கி வருகின்றது.

இதை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது, இத்திட்டம் மூலம் தற்போது அனைத்து குடிமக்களும் இ-சேவை மையங்கள் தொடங்கி பொதுமக்களுக்கான அரசின் இணையவழி சேவைகளை அவர்களின் இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே பெறுவதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ் உள்ளிட்ட 38 வகையான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் சான்றிதழ் பெற விண்ணப்பித்த நபர்களுக்கு 15 நாட்களுக்குள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சேவையின் பயன்பாடு பொதுமக்களுக்கு முறையாக சென்றடையும் வகையில் தமிழக அரசால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விண்ணப்பித்த தகுதி வாய்ந்த நபர்களுக்கு உரிய காலத்திற்குள் சான்றிதழ்கள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யப்பட்டு வருகிறது. மேலும் தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 3 சதவீதத்திற்கு மேல் இருப்பின் அவற்றின் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அரசின் நலத்திட்ட உதவிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே பொதுமக்கள் அனைவரும் தங்களுக்கு தேவையான சான்றிதழ்களை 50 சதவீத கட்டண தள்ளுபடியில் விண்ணப்பித்து சான்றிதழ் பெற்று பயன்பெறலாம் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபாண்மையினர் நலத்துறையின் சார்பில் தலா ரூ.6,000 மதிப்பில் 10 நபர்களுக்கு ரூ.60,000 மதிப்பிலான தையல் இயந்திரங்களையும், தலா ரூ.6,552 மதிப்பில்5நபர்களுக்கு ரூ.32,760 மதிப்பிலான சலவைப்பெட்டிகளையும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் தலா ரூ.6,250 மதிப்பில் 6 நபர்களுக்கு ரூ.37,500 மதிப்பிலான தையல் இயந்திரங்களையும், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 8 சுயஉதவிக் குழுவினர்களுக்கு ரூ.79,20,000 மதிப்பிலான வங்கி கடனுதவிகளுக்கான ஆணைகளையும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 25 நபர்களுக்கு ரூ.72,900 மதிப்பிலான பழச் செடிகள் தொகுப்பு, பண் புழு உரப் படுக்கை, கொய்யா பரப்பு விரிவாக்கம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், வருவாய்த்துறையின் சார்பில் 23 நபர்களுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டாக்களையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சாh;பில் 3 நபர்களுக்கு ரூ.59,500 மதிப்பிலான பேருந்து பயண அட்டை, காதொலி கருவி, மடக்கு ஊன்றுகோல் உட்பட பல்வேறு துறைகளின் சார்பில் 80 பயனாளிகளுக்கு ரூ.81,82,660 மதிப்பிலான பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், துணைத் தலைவர் லியாகத் அலி,இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அமீர் பாஷா, துணை இயக்குநர் (தோட்டக்கலை) குருமணி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன், உதவி திட்ட அலுவலர் ராஜா முகமது, வட்டாட்சியர் விஜயலெட்சுமி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# மதுரை மாவட்டம் திருமங்கலத்தில், மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் செயற்குழு கூட்டம்

**அமைச்சர் மூர்த்தி தலைமையில் நடைபெற்றது**



மதுரை, ஆக.29-

மதுரை மாவட்டம் திருமங்கலத்தில், மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் செயற்குழு கூட்டம், அமைச்சர் மூர்த்தி தலைமையில் நடைபெற்றது, இந்தக் கூட்டத்திற்கு தெற்கு மாவட்டச் செயலாளர் மணிமாறன், முன்னாள் எம்எல்ஏக்கள் லதா அதியமான், முத்துராமலிங்கம் உள்ளிட்ட பல நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் திருப்பரங்குன்றம், திருமங்கலம், கல்லுப்பட்டி, பேரையூர், உசிலம்பட்டி உள்ளிட்ட பகுதியில் இருந்து 3000-க்கும் மேற்பட்ட திமுக இளைஞரணி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அப்போது பேசிய அமைச்சர் மூர்த்தி, வருகிற 20-ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள திமுக இளைஞரணி மாநாடு, இதுவரை எவரும் நடத்தி முடிக்காத மாநாடாக பேசப்பட வேண்டும் எனவும், இந்த மாநாட்டிற்கு மதுரை தெற்கு மாவட்டத்தில் இருந்து பெரும்பாலான இளைஞர்கள் கலந்து கொண்டுள்ளதாக அனைவராலும் பேசப்பட வேண்டும் எனவும் பேசுகின்றனர். மேலும் மதுரையில் நடைபெற்று முடிந்த அதிமுக மாநாடு வீழ்ச்சி அடையும் வண்ணம் இளைஞர் அணி திமுக மாநாடு நடைபெற அனைவரும் உறுதிமொழி ஏற்று, இளைஞர் அணி சார்பில் நிர்வாகிகள், பல்வேறு பகுதிகளில் இருந்து இளைஞர்களை அழைத்து வந்து மாநாட்டை தமிழக அளவில் மட்டுமல்லாமல், உலக அளவில் பேசப்படும் வண்ணம் நடத்தி முடிக்க வேண்டும் என பேசினார். இதில் செல்லம்பட்டி ஒன்றிய செயளாலர் முத்துராமன், சீமானூத்து ஒன்றிய செயளாலர் அஜித்பாண்டி, உசிலை சிவா, உசிலை சரவணன், சேடம்பட்டி ஒன்றிய கவுன்சிலர் குபேந்திரன்,செல்லம்ப்பட்டி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஜெயபிரபு,மதன் மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### அரியலூர் மாவட்டத்தில் ரூ.10.56 கோடி மதிப்பீட்டில்

# 1,735 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கல்



அரியலூர்,ஆக.29-

அரியலூர் மாவட்டத்தில் ரூபாய் 10.56 கோடி மதிப்பில் 1,735 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் வழங்கினார். அரியலூர் மாவட்ட ஆட்சியரகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அரசின் சார்பில் செயல்படுத்தபடும் திட்டங்களின்பணிமுன்னேற்றம் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனிமேரி ஸ்வர்ணா, அரசு செயலாளர் சிறப்பு திட்ட செயலாக்கம் மரு. தரேஸ் அஹமது, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா,ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பொது சுகாதாரம், வருவாய்த் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, தொழிலாளர் நலன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், தாட்கோ, கூட்டுறவுத் துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில் 1,735 பயனாளிகளுக்கு, 10 கோடி 56 லட்சத்து ஐம்பதாயிரத்து நானூறு ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

முன்னதாக மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடமிருந்து பல்வேறுகோரிக்கைமனுக்களை பெற்று இம்மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அரசு திட்டங்களின் செயல்பாடுகள், பணி முன்னேற்றம் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெரோஸ்கான் அப்துல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் ம.ச.கலைவாணி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்(பொ) பாலமுரளி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத் திட்ட அலுவலர்(பொ) ஆறுமுகம், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், விஜயலட்சுமி, கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் தீபாசங்கரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பூங்கோதை, நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் உத்தண்டி, அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், வருவாய் கோட்டாட்சியர்கள், துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், சுகாதாரத்துறை, மாவட்ட நிலை அனைத்துத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



▶ பாண்டி பத்திரம் முத்துமாரி அம்மன் கோவில் பொங்கல் விழாவை முன்னிட்டு கடந்த 20ம் தேதி காப்பு கட்டுதலுடன் திருவிழா தொடங்கி நடைபெற்று வருகிறது. முத்துமாரிஅம்மன் தினமும் காலை,மாலை இருவேலையும் வீதி உலா வந்து, வழிநெடுகிலும் பக்தர்கள் அர்ச்சனைகள் செய்து வழிபட்டனர் அதன் தொடர்ச்சியாக பக்தர்கள் நேற்று,பால்குடம், காவடி , பறவை காவடி, வேல் காவடி எடுத்து வந்து அம்மனுக்கு நேர்த்திகடன் செலுத்தினர், தொடர்ந்து காவடியும், பின்னர் அக்கினி காவடியும், அதனை தொடர்ந்து கோவில் முன் பொங்கல் வைப்பு நிகழ்ச்சியும் நடைபெறஉள்ளது.

# மெட்ரிக் பள்ளிகளுக்கான கலை மற்றும் பண்பாட்டு போட்டியில் ரத்னா பள்ளி வெற்றி



தென்காசி,ஆக.29-

கடையநல்லூர் , விவேகானந்த கேந்திரம் நடத்திய கலை மற்றும் பண்பாட்டுப் போட்டி நடைபெற்றது, இப்போட்டியில் தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து மெட்ரிக்குலேஷன் பள்ளி மாணவ மாணவியர்கள் 250- க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள் இதில் ரத்னா ஆங்கிலப் பள்ளி மாணவர்கள் கதை சொல்லுதல் போட்டியில் மூன்றாம் வகுப்பு மாணவிஅனிகா இரண்டாம் இடமும், ஒப்புவித்தல் போட்டியில் மாணவன் ஒ .கார்த்திகேயன் இரண்டாம் இடமும், இசை போட்டியில் மாணவி அனுஸ்ரீ மூன்றாம் பரிசும் பெற்று மாவட்ட அளவிலான போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் மாணவர்கள் ஸ்ரீதர்ஷனா, ,பிரதிக்ஷா, ,விஷ்ணுவரன் , மதுவதனி ,சிவ சச்சு, ஆனந்த், செல்வகீர்த்திகா, ,அனிஷா, குருஸ்ரீகணேஷ் ஆகியோர் போட்டியில் கலந்து பாராட்டும் பரிசும் பெற்று வந்தனர்.போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவியரை பள்ளி நிர்வாகி ரத்னா பிரகாஷ் மற்றும்ஆசிரிய, ஆசிரியைகள் பாராட்டி வாழ்த்தினர்.

# அறந்தாங்கி அருகே மென்னமுடைய அய்யனார் சுவாமி திருக்கோயில் புரவி எடுப்புதிருவிழா



அறந்தாங்கி,ஆக.29-

புதுக்கோடை மாவட்டம் அறந்தாங்கி அருகே பஞ்சாத்தி கிராமத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ மென்னமுடைய அய்யனார் சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது, இக்கோயில் ஆண்டுதோறும் மழைவளம் வேண்டியும் விவசாயம் செழிக்கவும் புரவி எடுப்பு திருவிழா நடைபெறும். நேற்று நடைபெற்ற புரவி எடுப்பு திருவிழாவில் அறந்தாங்கி வேளாளர் தெருவில் செய்யப்பட்ட அய்யனார், கருப்பர், காளியம்மன் உள்ளிட்ட சாமி சிலைகளும், இருநூறுக்கும் மேற்பட்ட குதிரை, காளை, யானை மதளை உள்ளிட்ட சிலைகளை கடந்த பதினைந்து நாட்களாக விரதமிருந்த பக்தர்கள் மேளம் தாளம் முழங்க ஆட்டம் பாட்டத்துடன் சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் ஊர்வலமாக தோளில் சுமந்து சென்று ஸ்ரீ மென்னமுடைய அய்யனார் கோயில் கண்மாய் திடலில் இறக்கி வைத்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

பின்னர் அய்யனார், கருப்பர் காளியம்மன் உள்ளிட்ட சாமி சிலைகளுக்கு கண்மாய் திடலில் வைத்து கண்திறப்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்த புரவி எடுப்பு திருவிழாவில் பஞ்சாத்தி, ஆலங்குடி, இடையார் அறந்தாங்கி உள்ளிட்டசுற்றுவட்டார கிராம மக்கள் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு மென்னமுடைய அய்யனாரை வழிபட்டுச் சென்றனர்.

# அறந்தாங்கி அருகே ஸ்ரீநாகம்மாள் திருக்கோயில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கைபந்தயம்



அறந்தாங்கி, ஆக.29-

அறந்தாங்கி அருகே இடையாத்தூர் ஸ்ரீநாகம்மாள் திருக்கோயில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கைபந்தயம் நடைபெற்றது, சாலையின் இருபுறமும் நின்று ஆயிரக்கணக்கானோர் கண்டுரசித்தனர், புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே இடையாத்தூர் கிராமத்தில் அருள்மிகு நாகம்மாள் திருக்கோயில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி எல்லை பந்தயம் நடைபெற்றது.

பந்தயத்தில் பெரியமாடு, நடுமாடு,கரிச்சான்மாடு என மூன்று பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில்புதுக்கோட்டை தஞ்சாவூர் ராமநாதபுரம் சிவகங்கை மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட 100-க்கு மேற்பட்ட இரட்டை மாட்டு வண்டிகள் கலந்து கொண்டன, பெரியமாட்டில் போக வர 10 மைல் தொலைவும் நடுமாட்டில் 8 மைல் தொலைவும் கரிச்சான் மாட்டில் 6 மைல் தொலைவும் நிர்ணயிக்கப்பட்டது. போட்டியில் கலந்து கொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட இரட்டை மாட்டு வண்டிகள் நிர்ணயிக்கப்பட்ட பந்தய இலக்கினை நோக்கி சீறிப்பாய்ந்தன.

போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்களுக்கு மூன்று லட்ச ரூபாய் ரொக்க மற்றும் கேடயங்களும் வழங்கப்பட்டது, பந்தயத்தை சாலையின் இருபுறம் பந்தய ரசிகர்கள் உற்சமாக கண்டு ரசித்தனர், நாகுடி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# தென்காசியில் குற்றாலம் தீ விபத்து மதிமுக நிர்வாகிகள் ஆறுதல்



தென்காசி,ஆக.29-

குற்றாலத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 30க்கும் மேற்பட்ட கடைகள் எரிந்தது இதில் இரண்டு கோடிக்கும் அதிகமான பொருட்கள் தீயில் எரிந்து நாசமானது.இதில் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட வியாபாரிகளை மதிமுக மாநில துணைப் பொதுச் செயலாளர் தி.மு. இராசேந்திரன் தலைமையில் நிர்வாகிகள் சந்தித்து ஆறுதல் கூறினார்கள்.

அதனைத் தொடர்ந்து மதிமுக துணைப் பொதுச்செயலாளர் திருமலாபுரம் தி.மு. இராசேந்திரன் பத்திரிகையாளர்களிடம் கூறியதாவது, மதிமுக பொதுச் செயலாளர் வைகோவின் அறிவுறுத்தலுக்கு இணங்க, குற்றாலத்தில் தீ விபத்தால்,

பாதிக்கப்பட்ட இடங்களை பார்த்ததோடு, கடைகளை இழந்து தவிக்கும் வணிகர்களிடமும் விபத்து குறித்து விசாரித்து ஆறுதல் கூற வருகை தந்துள்ளோம். அவர்களது கோரிக்கைகளை மதிமுக பொதுச்செயலாளர் வைகோ மூலம் உரிய இடத்தில் முறையிட உறுதி அளித்துள்ளோம்.

அகத்தியர் வழிபட்டதாக பக்தர்களின் நம்பிக்கையைப் பெற்ற பழமையான இத்திருக் கோவில் சுவரை ஒட்டி அமைக்கப் பட்டிருந்த கடைகளும் எரிந்து சாம்பலானதால் கோவில் கற்சுவர்களும், மடப்பள்ளி கட்டிடப் பகுதியும் பாதிக்கப்பட்டுள்ளதை காண நேர்ந்தது. இதில் பாதிக்கப்பட்ட வணிகர்களுக்கு மாற்று இடம் ஒதுக்கப்பட வேண்டும், கோவிலை சுற்றிலும் உள்ள பாதைகள் முழுமையாக சீரமைக்கப்பட்டு பக்தர்கள் மற்றும் குளிக்கச் செல்லும் பயணிகளுக்கு சிரமமின்றி போய் வர வசதி செய்திட வேண்டும், தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலை பெற்று மாவட்ட நிர்வாகம் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும், இவர் அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மதிமுக மாவட்டச் செயலாளர்கள் இராம. உதயசூரியன் (தென்காசி தெற்கு), சுதாபாலசுப்பிரமணியன் (தென்காசி வடக்கு) மதிமுக மாவட்ட அவைத்தலைவர்கள் இடைகால செல்வசக்தி வடிவேல், தென்காசி

வெங்கடேஸ்வரன், தென்காசி ஒன்றிய மதிமுக செயலாளர் மாரிச் செல்வம்,குற்றாலம் பேரூர் மதிமுக செயலாளரும் குற்றாலம், வர்த்தகருமான வேல்ராஜ், மேலகரம் பேரூர் செயலாளர் இராமநாத குருக்கள், தென்காசி நகர செயலாளர் கார்த்திக்,

மாவட்ட பிரதிநிதி ஆராய்ச்சிபட்டி மாரிராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கோவை ஈஷா மையம் சார்பில் நடைபெற்ற அரியலூர் மாவட்ட அளவிலான கபாடிப் போட்டியில் குண்டவெளி, சிலால் அணியினர் முதலிடம்



*அரியலூர்,ஆக.29-*

*கோவை ஈஷா மையம் சார்பில் நடைபெற்ற அரியலூர் மாவட்ட அளவிலான கபாடிப் போட்டியில்குண்டவெளி சிலால் அணியினர் முதலிடம் பெற்றனர், இது பற்றி தத்தனூர் எம் ஆர் சி கல்வி நிறுவனம் சார்பில் வெளியிடப்பட்ட செய்தி குறிப்பு:*

*அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அருகே உள்ள, தத்தனூர் மீனாட்சி ராமசாமி கல்வி நிறுவன வளாகத்தில், கோவை ஈஷா மையம் சார்பில், ஈஷா கிராமோத்சவம் நிகழ்ச்சியின் கீழ், அரியலூர் மாவட்ட அளவிலான, இரண்டு நாள் கபாடிப்போட்டிகள் நடைபெற்றது.*

*இதில் ஆண்கள் அணியில் முதலிடத்தை குண்டவெளி அணியினரும், இரண்டாம் இடத்தை திருமானூர் அணியினரும், மூன்றாவது இடத்தை சூரியமணல் அணியினரும், நான்காம் இடத்தை ஸ்ரீபுரந்தான் அணியினரும் பெற்றனர், பெண்களுக்கான கபாடிப் போட்டியில் சிலால் அணியினர் முதலிடத்தையும், அழிசுக்குடி அணியினர் இரண்டாம்இடத்தையும், குமிழியம் அணியினர் மூன்றாம் இடத்தையும், குண்டவெளி அணியினர் நான்காம் இடத்தையும் பெற்றனர்.*

*வெற்றிபெற்றஆண்கள் மற்றும் பெண்கள் அணியினருக்கு, தனித்தனியே தலா ரூபாய் 12,000, 8,000 , 5,000, 5,000 என, முதல் நான்கு ரொக்க பரிசுகளையும், கோவை ஈஷா யோகா மையம் வழங்கியது. வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கான சான்றிதழ்களையும், பரிசுத்தொகையையும், மீனாட்சி ராமசாமி கல்வி நிறுவனங்களின் தாளாளரும், அரியலூர் மாவட்ட அமெச்சூர் கபாடிக் கழக தலைவருமாகிய எம்.ஆர்.ரகுநாதன், ஈஷா மையத்தின் அரியலூர் மாவட்ட பொறுப்பாளர்கள் ராஜா, ஷோபா, சவுந்தர் ஆகியோர் வழங்கினார்கள்.*

*இதிலிருந்து தேர்வு செய்யப்பட்ட சிறந்த 12 ஆண் விளையாட்டு வீரர்களும், சிறந்த 12 பெண் விளையாட்டு வீரர்களும், திருச்சியில் நடைபெறவுள்ள மண்டல அளவிலான கபாடிப் போட்டியில் பங்கேற்பர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை, அரியலூர் மாவட்ட அமெச்சூர் கபாடிக் கழக கன்வீனர் வினோத்குமார், பொறுப்பாளர்கள் திருமுருகன், சபாபதி, அன்பழகன், பால்ராஜ், குமார், மகேஷ் , திவாகர், ராஜசேகர், விஜய் ஆகியோர் செய்து இருந்தனர்.*

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# ஜெயலலிதா பெயர் இருட்டடிப்பு
# மெட்ரோ ரயில் நிர்வாகத்திற்கு கண்டனம்





# இந்தியா பெயரைக் கேட்டாலே பாஜக அலறுகிறது
# திமுகவினருக்கு எழுதிய கடிதத்தில் முதல்வர்

# ஜாமீன் கோர முடியாது: செந்தில் பாலாஜிக்கு
# செப்டம்பர் 15ஆம் தேதி வரை நீதிமன்ற காவல்




சென்னை / புதுக்கோட்டை | 29.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

29.08.2023 செவ்வாய்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கிடுகு வெங்கட ராமமூர்த்தி , தெலுங்கு எழுத்தாளர், மொழியியலாளர், வரலாற்று ஆய்வாளர் (பி.1863) (இ.1940)



ஜீவராஜ் மேத்தா , குஜராத் மாநிலத்தின் 1வது முதலமைச்சர் (பி.1887) (இ.1978)



கே. ஜெயக்கொடி , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி.1913)



## இன்றைய நினைவு நாள்

எம். கே. ராதா , இந்தியத் தமிழ் நாடக, திரைப்பட நடிகர் (பி.1910) (இ.1985)



ஏ. எச். எம். அஸ்வர் , இலங்கை அரசியல்வாதி (பி.1937) (இ.2017)



## தெலுங்கு மொழி நாள் (இந்தியா)

## அணுவாயுத சோதனைகளுக்கு எதிரான பன்னாட்டு நாள்

## தேசிய விளையாட்டு நாள் (இந்தியா)